**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 100** **நாள்: 16.05.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 10ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 86.10 சதவீத மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின்கீழ் 206 தொடக்கப்பள்ளிகள், 130 நடுநிலைப் பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 417 பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

2024-25ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 81 சென்னை பள்ளிகளில் பயிலும் 7,142 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதினார்கள். இதில் 3,113 மாணவர்கள் (83.93%) மற்றும் 3,036 மாணவியர் (88.44%) என மொத்தம் 6,149 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 86.10 ஆகும். இது சென்ற ஆண்டை விட 7 சதவீதம் கூடுதல் ஆகும்.

**பாடவாரியான தேர்ச்சி விகிதத்தில்** அறிவியல் பாடத்தில் 1 மாணவர், சமூக அறிவியல் பாடத்தில் 11 மாணவர்கள் என மொத்தம் 12 மாணவர்கள் 100/100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

**மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற பள்ளிகள்:**

சைதாப்பேட்டை-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 500 மதிப்பெண்களுக்கு 492 மதிப்பெண்கள் பெற்று முதலிடத்தையும், புத்தா தெரு-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 500 மதிப்பெண்களுக்கு 491 மதிப்பெண்கள் பெற்று இரண்டாமிடத்தையும், சூளைமேடு-சென்னை மேல்நிலைப்பள்ளி 500 மதிப்பெண்களுக்கு 487 மதிப்பெண்கள் பெற்று மூன்றாமிடத்தையும், சைதாப்பேட்டை-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 500 மதிப்பெண்களுக்கு 486 மதிப்பெண்கள் பெற்று நான்காம் இடத்தையும், காமராஜ் அவென்யூ-சென்னை உயர்நிலைப்பள்ளி 500 மதிப்பெண்களுக்கு 486 மதிப்பெண்கள் பெற்று ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளன.

**மதிப்பெண்கள் அடிப்படையில்** 450 மதிப்பெண்களுக்கு மேல் 190 மாணவ, மாணவியர்களும், 400லிருந்து 449 வரை 653 மாணவ. மாணவியர்களும் பெற்றுள்ளனர்.

350 மதிப்பெண்களுக்கு மேல் 1963 மாணவர்கள் பெற்றுள்ளனர்.

**100 சதவீத தேர்ச்சி** - புரசை, ஜி. கோயில் தெரு-சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம்-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, காமராஜபுரம்-சென்னை உயர்நிலைப்பள்ளி, கொடுங்கையூர், காமராஜர் சாலை-சென்னை உயர்நிலைப்பள்ளி, கண்ணம்மாபேட்டை-சென்னை உயர்நிலைப்பள்ளி, பாடிக்குப்பம்-சென்னை உயர்நிலைப்பள்ளி, லாய்ட்ஸ் சாலை-சென்னை மேல்நிலைப்பள்ளி, குக்ஸ் சாலை-சென்னை உயர்நிலைப்பள்ளி, கீழ்ப்பாக்கம்-சென்னை உயர்நிலைப்பள்ளி, கே.பி.தெரு-சென்னை உயர்நிலைப்பள்ளி, சேத்துப்பட்டு, மெக்நிக்கோலஸ் சாலை-சென்னை உயர்நிலைப்பள்ளி, ரங்கராஜபுரம்-சென்னை உயர்நிலைப்பள்ளி, வி.பி.கோயில் தெரு-சென்னை உயர்நிலைப்பள்ளி, சூளைமேடு-சென்னை மேல்நிலைப்பள்ளி என மொத்தம் 14 சென்னை பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**